Judicial Form No.53

DEPOSITION OF WITNESS

(Chapter XXIII, Cr.P.C)

IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, POCHAMPALLI.

Case No. CC.100/2020

Witness for Prosecution : PW7

| | | | |
|---|---|---|---|
| Name | ரமேஷ் | Taluk : | |
| Father's / Husband Name | கோபுமணி | Calling : | |
| Village | முருகனப்பட்டி | Age : | 43 |

Solemnly affirmed in accordance with the Provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on 14.05.2026.

எதிரி ஆஜர். எதிரி தரப்பில் வழக்கறிஞர் ஆஜர்.

**<u>அரசு தரப்பில் முதல் விசாரணை :</u>**

நான் தற்போது முருகனப்பட்டி கிராமத்தில் வசித்து பெண்ரஹள்ளி கிராம நிர்வாக அலுவலராக பணி செய்து வருகிறேன். கடந்த 10.08.2016 அன்று பெண்ரஹள்ளி கிராம நிர்வாக அலுவலராக பணியில் இருந்தபோது அன்று காலை 10.00 மணியளவில் பாரூர் காவல் நிலைய காவல் ஆய்வாளர் அவர்களிடம் இருந்து கிடைக்கபெற்ற தகவலின் பேரில் நானும் எனது உதவியாளர் சின்னசாமியுடன் பாரூர் காவல் நிலையத்திற்கு சென்றோம். பாரூர் காவல் ஆய்வாளர் எங்கள்இருவரையும் அழைத்து பாரூர் காவல் நிலைய குற்ற எண்.171/2016 என்ற வழக்கில் எதிரி வைரமுத்துவை கைது செய்ய இருப்பதாகவும், மேலும் அவர்களை விசாரிக்க எங்களை சாட்சிக்காக அழைத்ததாகவும் கூறினார்.

மேற்படி எங்கள் முன்னிலையில் ஆய்வாளர் வைரமுத்துவை விசாரிக்க அவர் காவல் நிலையம் வந்து ஒப்புதல் வாக்குமூலம் கொடுத்தார். அந்த ஒப்புதல் வாக்குமூலத்தில் வைரமுத்து, தானும், ஐயப்பன் மற்றும் சுதாகர் ஆகிய 3 பேரும் சேர்ந்து நாகரசம்பட்டியில் உள்ள தாயப்பன் மேஸ்திரி தெருவில் ஒரு பூட்டி இருந்த வீட்டின் பூட்டை இரும்பு ராடால் உடைத்து அங்கிருந்த 7 –1/2 பவுன் நகை மற்றும் 3000/– ரூபாயும் திருடிக்கொண்டு பணத்தை செலவு செய்துவிட்டதாகவும், மீதி இருந்த 5 –1/2 பவுன் நகையை வைரமுத்து தன்னிடம் வைத்துக்கொண்டதாகவும், மற்றவைகளை 2 நபர்களிடமும் கொடுத்துவிட்டதாகவும் ஒப்புதல் வாக்குமூலம் கொடுத்தார், அதை காவல்

ஆய்வாளர் பதிவு செய்தார். அந்த ஒப்புதல் வாக்குமூலத்தில் நானும் எனது உதவியாளர் சின்னாமியும் சாட்சியாக கையொப்பம் செய்தோம். ( மேற்படி என்னிடம் காட்டப்படும் ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள சாட்சியின் முதலாவது கையொப்பம் மட்டும் **அ.சா.ஆ.4** ஆக குறியீடு செய்யப்படுகிறது.)

மேற்படி ஒப்புதல் வாக்குமூலத்தின் அடிப்படையில் வழக்கு சொத்தானது தருமபுரியில் உள்ள சீனிவாசன் என்பவரிடம் உள்ளதாகவும், அதனை கைப்பற்றவேண்டி என்னையும் எனது உதவியாளரையும் போலீசார் தருமபுரியில் உள்ள வெள்ளிப்பேட்டை தெருவிற்கு அழைத்துசென்று சீனிவாசன் என்பவரை விசாரணை செய்து அப்போது சீனிவாசன் எடுத்து ஆஜர் செய்த முருக்கு செயின் 2 பவுன், நெக்லஸ் 2 பவுன், சாதாரண மைனர் செயின் 1–1/2 பவுன் ஆகியவற்றை கைப்பற்றுதல் மகஜர் மூலம் கைப்பற்றினர். அதில் சாட்சியாக நானும் எனது உதவியாளர் சின்னாமியும் சாட்சியாக கையொப்பம் செய்தோம். ( மேற்படி என்னிடம் காட்டப்படும் முதலாவது கைப்பற்றுதல் மகஜரில் உள்ள சாட்சியின் முதலாவது கையொப்பம் மட்டும் **அ.சா.ஆ.5** ஆக குறியீடு செய்யப்படுகிறது.) இது குறித்து போலீசார் என்னை விசாரணை செய்தார்கள்.

<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u> :

எனக்கு யார் போன் செய்து, எவ்வளவு நேரத்திற்கு வரசொன்னார்கள் என்றால் எனக்கு பாரூர் காவல் நிலைய காவல் ஆய்வாளர் கடந்த 10.08.2016 ஆம் தேதி காலை 10.00 மணியளவில் போன் செய்து தகவல் சொன்னார், நான் 11.30 மணியளவில் அந்த இடத்திற்கு சென்றேன். நான் 11.30 மணயளவில் நான் காவல் நிலையம் சென்றதாக சொல்லியுள்ளபோது அங்கு யார்,யார் இருந்தார்கள் என்றால் அங்கு வைரமுத்து, ஐயப்பன், மற்றும் சுதாகர் இருந்தார்கள், அங்கு மற்ற காவலர்களும், பொதுமக்களும் இருந்தார்கள். காவல் நிலையத்தில் பொதுமக்கள் இருந்ததாக சொல்லியுள்ளபோது எத்தனை நபர்கள் அங்கு இருந்தார்கள் என்றால் சுமார் 7, 8 நபர்கள் இருந்தார்கள்.

நான் காவல் நிலையம் செல்வதற்கு முன்பே வைரமுத்து கொடுத்தாக சொல்லப்படும் ஒப்புதல் வாக்குமூலம் தயார் செய்து வைக்கப்பட்டு இருந்தது என்றால் சரியல்ல, நான் சென்ற பின்புதான் விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்தார்கள். நான் காவல் நிலையம் சென்ற உடனே விசாரணை தொடங்கி ஒப்புதல் வாக்குமூலம் கொடுத்து பதிவு செய்யப்பட்டது என்றால்

சரிதான். காவல் நிலையத்தில் வைரமுத்து ஒப்புதல் வாக்குமூலம் கொடுக்கும் சமயத்தில் யார், யார் இருந்தார்கள் என்றால் நான், எனது உதவியாளர், போலீசார் மற்றும் பொதுமக்கள் 7, 8 நபர்கள் இருந்தார்கள்.

காவல் நிலையத்தில் வைரமுத்து ஒப்புதல் வாக்குமூலம் கொடுத்து பதிவு செய்யப்பட்டு அவர் கையொப்பம் செய்யும் வரை மேற்சொன்ன நபர்கள் அனைவரும் காவல் நிலையத்தில் இருந்தார்களா என்றால் இருந்தார்கள். வைரமுத்து காவல் நிலையத்தில் ஒப்புதல் வாக்குமூலம் கொடுத்து அதில் திருடியாதாக சொல்லும் பட்சத்தில் அவர் எந்த தேதியில் திருடியதாக வாக்குமூலம் கொடுத்தார் என்றால் 10.08.2016 ஆம் தேதி திருடியதாக சொன்னார். வைரமுத்து கடந்த 10.08.2016 ஆம தேதி திருடியதாக சொல்லப்பட்டுள்ள வழக்கிற்கு தற்போது நான் சாட்சியம் சொல்ல வந்துள்ளேன் என்றால் சரிதான்.

நான் தருமபுரியில் உள்ள வெள்ளிபேட்டை தெருவிற்கு சென்றதாக சொல்லியுள்ளபோது யார், யார் சென்றோம் என்றால் நான், எனது உதவியாளர், வைரமுத்து, சுதாகர், ஐயப்பன், பாரூர் காவல் நிலைய காவல் ஆய்வாளர் மற்றும் 2 காவலர்கள் வந்தார்கள். எத்தனை மணிக்கு தருமபுரி சென்றோம் என்றால் மாலை சுமார் 04.30 மணி இருக்கும். வைரமுத்து காவல் நிலையத்தில் காலை 11.30 மணியில் இருந்து எவ்வளவு நேரம் ஒப்புதல் வாக்குமூலம் அளித்தார் என்றால் சுமார் 20 நிமிடம் அளித்தார்.

வைரமுத்து ஒப்புதல் வாக்குமூலம் அளித்த பின்னிட்டு மாலை 04.30 மணிவரை நான் காவல் நிலையத்தில் போலீசாருடன் இருந்தேனா என்றால் இல்லை, நான் அலுவல் சம்மந்தமாக சென்றுவிட்டு மீண்டும் 03.45 மணிக்கு காவல் நிலையம் வந்தேன். வைரமுத்து அவரது ஒப்புதல் வாக்குமூலத்தில் தருமபுரிக்கு உடனே சென்றால் திருடியாதாக சொல்லப்படும் பொருட்களை எடுத்து ஆஜர் படுத்துவதாக சொன்னாரா என்றால் இல்லை, திருடிய பொருட்களை தருமபுரியில் வைத்திருப்பதாகவும், எடுத்து தருவதாகவும் சொன்னார்.

மேற்படி பொருட்களை கைப்பற்ற வேண்டி போலீசார் மீண்டும் என்னை அழைத்ததன் அடிப்படையில் தருமபுரி சென்றேன் என்றால் சரிதான். தருமபுரிக்கு பொருட்களை கைப்பற்ற வேண்டி என்னை மீண்டும் எப்போது போலீசார் அழைத்தனர் என்றால் யாரும் என்னை அழைக்கவில்லை, நான்

மீட்டிங் முடித்து விட்டு மீண்டும் சென்றேன். தருமபுரிக்கு என்னை அழைத்து சென்ற பின்னிட்டு என்ன, என்ன பொருட்களை குறிப்பிட்டு கைப்பற்றினார்கள் என்றால் முருக்கு செயின் 2 பவுன், நெக்லஸ் 2 பவுன், சாதாரண மைனர் செயின் 1–1/2 பவுன் ஆகியவற்றை மட்டும் கைப்பற்றினார்கள். வேறு எந்த பொருட்களையும் யாரிடமிருந்தும் கைப்பற்றப்படவில்லை என்றால் சரிதான்.

போலீசார் என்னை விசாரித்ததாக சொல்லியுள்ளபோது ஒப்புதல் வாக்குமூலம் அளித்த 10.08.2016 ஆம் தேதிக்கு பின்னிட்டு எந்த தேதியில் என்னை விசாரித்தார்கள் என்றால் அதற்கு பின் என்னை விசாரணை செய்யவில்லை. நான் சொல்வது போல வைரமுத்து காவல் நிலையத்தில் வைத்து எந்த ஒப்புதல் வாக்குமூலமும் அளிக்கவில்லை என்றாலும், நான் அரசு அதிகாரி என்பதால் போலீசாருக்கு ஆதரவாக பொய்சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. இந்த வழக்கை போல் எத்தனை திருட்டு வழக்கிற்கு சாட்சியம் அளிக்க நான் சென்றுள்ளேன் என்றால் வேறு எந்த வழக்கிற்கும் செல்லவில்லை. நான் சொல்வது தவறு, நான் போலீசாருக்கு ஆதரவாக நிறைய வழக்குகளில் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும், போலீசாரின் கையிருப்பு சாட்சியாக இருக்கிறேன் என்றாலும் சரியல்ல. இந்த வழக்கிற்கும் எதிரிக்கும் எந்த சம்மந்தமும் இல்லை என்றாலும், காவல் நிலையத்தில் வைத்து தயார் செய்யப்பட்ட பொய்யான ஆவணங்களில் கையொப்பம் செய்துவிட்டு தற்போது பொய்சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் சரியல்ல.

"Taken down by me/before me in open Court, interpreted/read over to the witness and admitted by the deponent to be correct".

Sd/–M.Suriyakumar
District Munsif Cum Judicial
Magistrate, Pochampalli.